பதிவெண் :

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## தமிழ்

9-ம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100

நேரம் : 3 மணி

பகுதி - I

**I.** அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. 15x1=15

1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்
2. சிந்தா மணி என்பதன் இலக்கணக்குறிப்பு அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
இ) பண்புத் தொகை ஈ) வினைத் தொகை
3. 'மாடு'- என்பதன் எதிர்ச்சொல் என்ன? அ) கீழே ஆ) மேலே இ) பக்கம் ஈ) தொலைவு
4. பகுதி, விகுதி மட்டும் இடம் பெறும் சொல் எது? அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருத்திய
5. மல்லல் மூதூர் வயவேந்தே-கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசமரம் இ) வளம் ஈ) பெரிய
6. பெயரடை இடம் பெறாத தொடரை கண்டறிக.
அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம் இ) எந்த ஓவியம் ஈ) கொடிய விலங்கு
7. பைங்கூழ் வளர்ந்தது ஆகுபெயரின் வகையைக் கண்டறிக.
அ) கால வாகுபெயர் ஆ) காரியவாகுபெயர் இ) கருவியாகு பெயர் ஈ) கருத்தாவாகு பெயர்
8. கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள்
அ) நஞ்சை நிலம் ஆ) களர்நிலம் இ) உவர்நிலம் ஈ) புஞ்சை நிலம்.
9. "ஒன்றறி வதுவே உற்ற றிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே" - இவ்வடியில் அதனொடு என்பது எதைக்குறிக்கிறது.
அ) நுகர்தல் ஆ) தொடுஉணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
10. பல்லவர் காலச்சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
11. 'பொதுவர்கள் உறப்போர் அடித்திடும்' நிலப்பகுதி..........
அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி
அணி விழா அறைந்தனன் அகநகர் மருங்கென்.

12. இப்பாடல் இடம் பெற்ற நூலின் பெயர் என்ன?
அ) தமிழோவியம் ஆ) மணிமேகலை இ) புறநானூறு ஈ) தமிழ் விடு தூது.
13. இப்பாடலடிகளை இயற்றியவர் யார்?
அ) தமிழன்பன் ஆ) சாத்தனார் இ) குட்புலவியனார் ஈ) சேக்கிழார்.
14. 'வசி' என்ற சொல்லின் பொருள்............... அ) மாலை ஆ) மழை இ) மலை ஈ) மதி
15. அகநகர்- பிரித்து எழுதுக. அ) அக+நகர் ஆ) சு+நகர் இ) அம்+நகர் ஈ) அகம்+நகர்.

பகுதி - II (மதிப்பெண்கள் :18)

**II.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும்விடையளி வினா எண். 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4x2=8

16. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
(அ) நாடெல்லாம் நீர் நாடாகச்சோழநாடு திகழ்கிறது.
(ஆ) முல்லைப்பெரியாறு அணைக்கட்டியவர் ஜான்பென்னிகுவிக்
18. உண்டி கொடுத்தோர் உயிரி கொடுத்தோரே-குறிப்பு தருக.
19. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
20. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?
21. சுழன்றும் எனத்தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல்.எழுதுக'.

பிரிவு - 2

குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 5x2=10

22. மரபு இணைச் சொற்களைத்தொடரில் அமைத்து எழுதுக. அ) நகமும் சதையும் ஆ) முதலும் முடிவும்.
23. பகுபத உறுப்பிலக்கணம் தருக. நெறிப்படுத்தினார்
24. அந்தாதிச் சொற்களை உருவாக்குக. அததி
25. கலைச் சொற்கள் தருக. அ. Ocean ஆ. Excavation
26. தொடரை பழமொழி கொண்டு நிரப்புக. அ. சித்திரமும் கைப்பழக்கம்...... ஆ. இளமையில் கல்வி......
27. விடையைத் தமிழ் எண்களில் எழுதுக. (அ) பதினெண் கீழ்கணக்கு நூல்கள் (ஆ) சிற்றிலக்கியங்கள் 96
28. மரபுத்தொடர்களை தொடர்களில் அமைக்க. அ. கிணற்றுத்தவளை ஆ. எட்டாக்கனி

Scanned with OKEN Scanner

TNPSC JOB



## பகுதி - III (மதிப்பெண்கள் :18)

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை யளிக்கவும். **2x3=6**

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

30. உரைப்பத்தியைப்படித்து வினாக்களுக்கு விடைதருக .

ஆசியாவிலே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது. தஞ்சை சரசுவதி மகால் நூலகம் இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன. உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது. திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.

அ. முதல் பொது நூலகம் எந்த ஊரில் தொடங்கப்பட்டது?
ஆ. ஆசியாவிலேயே மிகப்பழமையான நூலகம் எது ?
இ. கன்னிமாரா நூலகத்தின் சிறப்பு என்ன?

31. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள்யாவை ?

### பிரிவு - 2

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். **2x3=6**

32. குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்படுக.

33. திருப்பாவை குறிப்படும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ. 'ஒன்றறிவதுவே' எனத் தொடங்கும் தொல்காட்டிய நூற்பா. (அல்லது)
ஆ. 'கல்லிடை' எனத்தொடங்கும் இராவண காவியப்பாடல்

### பிரிவு - 3

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. **2x3=6**

35. 'கொடு' என்பது முதல் வினையாகவும், துணை வினையாகவும் அமையுமாறு தொடர்கள் எழுதுக

36. ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. வல்லினம் மிகும் இடங்கள் மூன்றினை எடுத்துக்காட்டோடு எழுதுக.

## பகுதி - IV (மதிப் பெண்கள் : 25)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

38. (அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விளக்குக. (அல்லது)
(ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவிபேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

39. (அ) உங்களின் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய 'கால் முளைத்த கதைகள் (ஆசிரியர் எஸ். ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்து கருத்துகளைக் கடிதமாக எழுதுக. (அல்லது)
(ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ். ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக

40. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக .



41. அஞ்சல் அலுவலகத்தில் பணம் பெறும் படிவத்தை நிரப்புக. ரூபாய். 1000

42. அ.உங்களுக்குப் பிடித்தவை / உங்கள் பொறுப்புகள் பற்றி ஐந்து தொடர்களை எழுதுக. (அல்லது)
ஆ. மொழி பெயர்க்க.

1. The art of people is a true mirror to their minds – Jawaharlal Nethru.
2. Winners don't do different things They do things differently – Shiv khera.

## பகுதி - V

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் **3x8=24**

43. (அ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.
(அல்லது)
(ஆ) வேளாண்மை, நீரை அடிப்படையாக கொண்டது என்பதை விளக்குக.

44. (அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகளை விளக்குக. (அல்லது)
(ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் செய்தி கதையின் மூலமாக விளக்குக.

45. (அ) முன்னுரை- திருக்குறள் - திருவள்ளுவர் உலகப் பொது மறை- நூல் அமைப்பு- மொழிபெயர்ப்பு - நீதிக் கருத்துகள்- முடிவுரை. ஆகிய குறிப்புகளை கொண்டு 'உலகப்பொதுமறை திருக்குறள். என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது )
(ஆ) முன்னுரை பெண்கள்-சங்ககாலத்தில் பெண்களின் நிலை - இடைக்காலத்தில் பெண்களின் அவலநிலை. ஆகிய குறிப்புகளைக் கொண்டு பெண்கள் நாட்டின் கண்கள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com